



# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

## திருச்சி

மின்னணு இதழ்

மார்ச் மாதம்



## செயலர் பக்கம்

அருள்பணி. சு. மரியதூசை

### அன்புமிக்கவர்களே!

**திருச்சி மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழுவின் மின்னணு செய்தி இதழ் வழியாக முதன் முறையாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. இச்செய்திக் கதிர் வழியாக எம் பணிக்குழுவின் செயல்பாடுகள் குறித்து மாதம்தோறும் உங்களோடு பகிர்ந்துகொள்ளும் இம்முயற்சி இறையருளாலும், உதவும் நல்லுள்ளங்களாலும் தொடர்ந்து இனிதே நடைபெற வேண்டுகிறேன்.**

உலகில் பயணங்களுக்குப் பஞ்சமில்லை. பயணங்கள் சாத்தியப்பட நமக்குப் பாதைகள் தேவை. பாதைகள் இல்லாமல் பயணங்கள் இல்லை. பாதைகளைப் பொறுத்தே பயணங்கள் அமைகின்றன. உயர்ந்த இலக்கைத் தீர்மானித்தால் மட்டும் போதாது. அந்த உயர்ந்த இலக்கினை அடைய உன்னதமான வழிகளை நாம் பின்பற்ற வேண்டும். தவறான பாதையில் மிகவும் வேகமாக ஓடிச் செல்வதால் ஒரு பயனுமில்லை. அதே சமயத்தில் சரியான பாதையில் மெல்ல மெல்ல நடைபோட்டால்கூட என்றாவது ஒருநாள் நம்முடைய இலக்கினை நிச்சயம் அடைவோம் என்கிற நம்பிக்கை இருக்கும். தவறான பாதைகள் தவறான இலக்கிற்கு நம்மை இட்டுச்செல்லும். சரியான பாதைகள் சரியான இலக்கிற்கு நம்மை இட்டுச்செல்லும். எனவே பாதையைத் தெரிவு செய்வதில்தான் பயணத்தின் சிறப்பு அடங்கியிருக்கிறது.

...



...

ஆங்கிலக் கவிஞர் இராபர்ட் ஃப்ரோஸ்ட் எழுதியுள்ள 'பயணிக்காத பாதை' என்கிற கவிதையில் அவர் பின்வருமாறு கூறுகிறார்: 'என் வாழ்க்கைப் பயணத்தில் ஒரு முக்கிய கட்டத்தில் நான் நடந்து வந்த பாதை இரண்டாகப் பிரிந்தது. அந்த இரண்டு பாதைகளில் எந்தப் பாதையில் செல்வது என்ற குழப்பம் வந்தது. ஒன்று பலரும் நடந்து போன பாதையாகத் தெரிந்தது. இன்னொன்று அதிகம் பேர் நடந்து போகாத பாதையாகத் தெரிந்தது. ஒருமுறை பாதையைத் தேர்ந்தெடுத்தபின் மாற்றிக்கொள்வது சாத்தியமல்ல என்பதால் நிறைய யோசித்தேன். முடிவில் அதிகம் பயணிக்காத பாதையைத் தேர்ந்தெடுத்தேன். அதுவே என் வாழ்க்கையில் எல்லா மாற்றங்களையும் ஏற்படுத்தியது'

ஆம், நம்மில் பலரும் பயணிக்கத் தயங்கும் பாதை இயேசுவின் பாதை. ஏனெனில் அது பாடுகளின் பாதை, சிலுவைப் பாதை.தடம் பார்த்து நடப்பவன் மனிதன். தடம் பதித்து நடப்பவன் மாமனிதன். மானுடம் பயணிக்க வேண்டிய மாண்புக்குரிய பாதைகள் பலவற்றை, வரலாற்றில் பல மாமனிதர்கள் வகுத்துக் கொடுத்துள்ளார்கள். அவர்களுள் இயேசு தனிச்சிறப்புக்குரியவர். ஏனென்றால் இயேசுவே தந்தையாம் இறைவனை நோக்கிய நம் பயணத்திற்கான வழி என்று அவரே கூறியுள்ளார். அதே நேரத்தில் பலரும் பயணிக்கத் தயங்கும், தவிர்க்கும் பாதையும் இயேசுவே. இத்தவக்காலத்தில் இனியாகினும் இயேசுவின் பாதையே நமது பாதையாக மாற வேண்டும். இயேசுவோடு நாமும் இணைந்து அவருடைய பாதச்சுவடுகளில் நம்முடைய பாதத்தைப் பதித்து நாம் பயணத்தை தொடங்க வேண்டும். அதுவே இயேசுவின் சீடராய் வாழ்வதற்கான வழித்தடம். 'இயேசுவின் பாதையே நமது பாதை. இயேசுவுடன் இணைந்தே நமது பயணம்' - நாம் தொடங்கியுள்ள இத்தவக்காலத்தில் இவ்வார்த்தைகளே நமது வாழும் முறையாக மாறட்டும்

யூபிலி ஆண்டு 2025
எதிர்நோக்கின் திருப்பயணிகள்

# யூபிலி ஆண்டு அறிவோம்!

## #2 யூபிலி ஆண்டு என்பது...

"யூபிலி" என்ற சொல் எபிரேய மொழியில் "யோபெல்" என்பதிலிருந்து வந்தது. இதற்கு "செம்மறியாட்டின் கொம்பு" என்று பொருள்.

பழைய ஏற்பாட்டில் ஒவ்வோர் ஐம்பதாவது ஆண்டும், யூபிலி ஆண்டாக அனுசரிக்கப்பட்டது.

சமுதாயத்தில் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் உறுதிப்படுத்துவதும், படைத்தவரோடும் படைப்புகளோடும் உறவைப் புதுப்பித்துக் கொள்வதும் இதன் நோக்கங்களாகும்.

லேவியர் *25:8-11* இல் யூபிலி ஆண்டு குறித்து வாசிக்கலாம்.

கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு
திருவிவிலியம் - திருமறைக்கல்வி - திருவழிபாடு
திருச்சி மறைமாவட்டம்

## #3 திரு அவையில் யூபிலி ஆண்டு

திரு அவையில் யூபிலி ஆண்டு என்பது கடவுளின் கருணையையும் இரக்கத்தையும் சுட்டிக்காட்டும் அருளின் ஆண்டாகும்.

இவ்வாண்டு நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய அருள்வாழ்விற்கான நற்பண்புகளை நம்மில் வளரச் செய்கிறது.

மகிழ்ச்சியுடனும், சமாதானத்துடனும், நமது சகோதர சகோதரிகளோடு சேர்ந்து கடவுளுக்கு சேவை செய்யும் அர்ப்பணிப்பை தூண்டுகிறது.

திருப்பயணம் மேற்கொள்ளல், திருவழிபாட்டு கொண்டாட்டங்களில் பங்கேற்றல், பிறரன்புச் செயல்களில் ஈடுபடல் போன்ற அழைப்புகளை யூபிலி ஆண்டு தருகிறது.

கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு
திருவிவிலியம் - திருமறைக்கல்வி - திருவழிபாடு
திருச்சி மறைமாவட்டம்

# தன்னார்வ வேதியர்களின் களப்பணி - புனித ஜோவாக்கிம் அன்பகம் சந்திப்பு



02.02.2025 ஞாயிற்றுக்கிழமை ஆண்டவர் இயேசு கோவிலில் காணிக்கையாக ஒப்பக்கொடுக்கப்பட்ட திருவிழாவன்று மாலை 4 மணி முதல் 7 மணி வரை பழையகோவில் அன்னை நகரில் உள்ள, திருச்சி புனித அன்னாள் சபை அருள்சகோதரிகளால் நடத்தப்படுகிற, புனித ஜோவாக்கிம் அன்பகத்தை (மாணவர் இல்லத்தை) திருச்சி மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழுவில் தற்போது பயிற்சி பெற்று வரும் தன்னார்வ வேதியர்கள் 25 நபர்கள் சென்று சந்தித்தனர். கிறிஸ்து பிறப்பின் 2025 ஆம் யூபிலி ஆண்டில் ▯எதிர்நோக்கின் திருப்பயணிகளாய் ஏழை எளிய மாணவக் கண்மணிகள் இருக்கும் இந்த அன்பகத்திற்கு பிறரன்புச் சாட்சியத் திருப்பயணமாய் சென்று, அங்கிருந்த குழந்தைகளோடு உரையாடி உறவாடி மகிழ்ந்தனர். கேக், வடை, பாதாம் பால் ஆகியவற்றை அவர்களோடு பகிர்ந்து கொண்டனர். குழந்தைகளுக்குத் தேவையான எழுதுப் பொருள்கள், ஸ்கெட்ச், கிரேயான்ஸ், புத்தகங்கள், நோட்டுகள், தின்பண்டங்கள், பற்பசை, சோப்புகள் மற்றும் ஐந்தாயிரம் ரூபாய் மகிழ்ந்தனர். பாடல்,நடனம், நன்கொடையாகவும் வழங்கி தங்களது அன்பை பகிர்ந்து நாடகம் ஆகிய கலைநிகழ்வுகள் வழியாக குழந்தைகளை மகிழ்வித்தனர். குழந்தைகளுக்கு மனமகிழ்வு விளையாட்டுகள் நடத்தி அனைவருக்கும் திருக்குறள் புத்தகம் பரிசாக வழங்கப்பட்டது. இறுதியில் தன்னார்வ வேதியர்கள் குழந்தைகளோடு உரையாடி அவர்களது அனுபவங்களைக் கேட்டறிந்தனர். இது அனைவருக்கும் ஓர் ஆசீர்வாதமான அனுபவமாக அமைந்திருந்தது என்று கூறி இறைவனைப் புகழ்ந்து தங்கள் இல்லம் திரும்பினர்.
















# விடுமுறை விவிலியப் பள்ளி மாநிலப் பயிற்சிப் பாசறை



பிப்ரவரி மாதம் 15, 16 (சனி, ஞாயிறு) ஆகிய இரு நாள்கள் "மகிழ்வோம்....புகழ்வோம் **VBS - 2025**" என்ற தலைப்பில் சிவகங்கையில் தமிழக விவிலியப் பணிக்குழு நடத்திய **VBS** கருத்தூட்டுனர்களுக்கான இருநாள் மாநிலப் பயிற்சி பாசறையில் நம் திருச்சி மறைமாவட்ட வேதியர்கள் திரு. லாசர், திரு. ராபர்ட், திருமதி பவுலின் மற்றும் தன்னார்வ வேதியர்கள் திரு. ஜானி, திருமதி. லிசி ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.







# இயேசுவின் கண்மணிகள் இயக்கம் (அ) பாலர் சபை தின விழா

திரு அவை ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 2ஆம் ஞாயிறை பாலர் சபை தினமாகக் கொண்டாடி வருகிறது, தம் கத்தோலிக்கப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கரை இறையன்பிலும் பிறரன்பிலும் வளர்த்திட பள்ளிகளில் இயேசுவின் கண்மணிகள் இயக்கம் (அ) பாலர் சபை செயல்படுகிறது. நமது மறைமாவட்டத்தில் இவ்வாண்டு பாலர் சபை தினமானது பிப்ரவரி 20 வியாழன் அன்று மதியம் 2.00 மணியளவில் அனைத்து தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளை ஒருங்கிணைத்து திருச்சி நல்லாயன் நிலையத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் கலந்து கொண்ட தொடக்க நடுநிலைப் பள்ளிகளைச் சேர்ந்த மாணாக்கர்கள் நடனங்கள் பாடல்கள் நாடகம் ஆகிய கலை நிகழ்வுகளை வழங்கினர். இரண்டு பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் தங்கள் பள்ளிகளில் பாலர் சபை நடைபெறும் விதத்தை அறிக்கையாக வாசித்தனர். பாலர் சபை இயக்குநர் அருள்பணி. மரியசூசை அவர்கள் அனைத்து பள்ளிகளிலும் பாலர் சபை செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துக் கூறி, பாலர் சபையை சிறப்பாக செயல்படுத்தும் பள்ளிகளை பாராட்டி இயக்குநர் உரை ஆற்றினார். சிறப்பு அழைப்பாளராக வந்திருந்த அய்யம்பட்டி பங்குத் தந்தை அருள்பணி. லெனின் ஆரோக்கியராஜ் அவர்கள் ஒரு சிறிய கதை மூலம் பிறருக்கு உதவுவதன் அவசியத்தை விளக்கிக் கூறி சிறப்புரை வழங்கி உற்சாகமூட்டினார். கலந்து கொண்ட அனைவரும் பாலர் சபை உறுதிமொழி எடுத்தனர். பாலர் சபை விழாப் பரிசாக ஆசிரியாகளுக்குப் புத்தகம் வழங்கப்பட்டது. கலை நிகழ்வுகளில் பங்கேற்ற அனைத்து மாணாக்கருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் தேநீர், கேக் வழங்கபட்டன. இவ்விழாவில் 22 பள்ளிகளிலிருந்து 28 ஆசிரியர்களும் 82 மாணவர்களும் கலந்து கொண்டனர்.

















# ஞாயிறு மறைக்கல்வி
# பொதுத் தேர்வும் சிறப்புத் தேர்வும்

16.02.2025 ஞாயிறு அன்று நமது திருச்சி மறைமாவட்டத்தைச் சாந்த பங்குகளில் ஞாயிறு மறைக்கல்வி மாணாக்கருக்கான பொதுத்தேர்வு அந்தந்த பங்குகளில் நடத்தப்பட்டது.








23.02.2025 ஞாயிறு அன்று ஞாயிறு ஞாயிறு மறைக்கல்வி மாணாக்கருக்கான மறைமாவட்ட அளவிலான சிறப்புத் தேர்வு புத்தூர், கிராப்பட்டி, பொன்மலை ஆகிய மறைவட்டப் பங்குகளுக்கு திருச்சி நல்லாயன் நிலையத்திலும், மணப்பாறை மறைவட்டப் பங்குகளுக்கு மணப்பாறை புனித லூர்தன்னை ஆலயத்திலும், கீரனூர் மறைவட்டப் பங்குகளுக்கு கீரனூர் புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்திலும் நடைபெற்றது. திருச்சியில் 34 பங்குகளைச் சேர்ந்த 180 ாணவர்களும் மணப்பாறையில் 8 பங்குகளைச் சேர்ந்த 41 மாணவர்களும் கீரனூரில் 4 பங்குகளைச் சேர்ந்த 21 மாணவர்களும் இத்தேர்வில் கலந்து கொண்டனர். 25 ஆசிரியர்கள் தங்களுடைய மறைக்கல்வி பாடக் குறிப்பேடுகளைச் சமர்ப்பித்தனர். இவர்கள் அனைவருக்கும் பரிசளிக்கப்பட்டது.



# பள்ளி மறைக்கல்வி நன்னெறிக் கல்வி பொதுத் தேர்வும் சிறப்புத் தேர்வும்

2024-2025ஆம் கல்வி ஆண்டுக்கான பள்ளி மறைக்கல்வி நன்னெறிக்கல்விக்கான பொதுத்தேர்வு 13.02.2025 வியாழன் அன்று 4 முதல் 8 ஆம் வகுப்பு படிக்கும் மாணாக்கருக்கு பள்ளி அளவில் நடைபெற்றது. இதில் தேர்வாகி முதல் இரண்டு இடங்களைப் பிடித்த மாணாக்கருக்கான மறைமாவட்ட அளவில் நடைபெறும் சிறப்புத் தேர்வானது, 27.02.2025 வியாழன் அன்று 4 மற்றும் 5ஆம் வகுப்பு மாணாக்கருக்கும், 28.02.2025 வெள்ளி அன்று 6, 7, 8 ஆம் வகுப்பு மாணாக்கருக்கும், திருச்சி நல்லாயன் நிலையத்திலும் மணப்பாறை புனித லூர்தன்னை ஆலயத்திலும் நடைபெற்றது.









## ஞாயிறு மறைக்கல்வி சந்திப்புகள்

இம்மாதம் அம்பிகாபுரம் மற்றும் குளத்தூராம்பட்டி ஆகிய பங்குகளில் பணிக்குழுச் செயலர், ஞாயிறு திருப்பலி நிறைவேற்றி, ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகளைச் சந்தித்து ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஊக்கப்படுத்தினார்.







கருமண்டபம் பங்கில் நடைபெற்ற ஞாயிறு மறைக்கல்வி ஆண்டு விழாவில் செயலர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார்








## மார்ச் மாத நிகழ்வுகள்

மார்ச் 08, 15 – பள்ளி மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான தியானம் (திருச்சி)

மார்ச் 16 – விடுமுறை விவிலியப் பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பாசறை (மணப்பாறை)

மார்ச் 30 – விடுமுறை விவிலியப் பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பாசறை (திருச்சி)

மார்ச் 9 – தன்னார்வ வேதியர்களின் திருப்பயணம்

## இரண்டு படங்களுக்கும் இடையேயுள்ள ஆறு வித்தியாசங்களைக் கண்டுபிடித்து மகிழுங்கள்!



